RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2511

# காங்கிரஸ் சிந்தனையாளர்களின் பண்பாட்டு மீட்டுருவாக்கம்

அ. லட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர்கல்வி நிறுவனம், கோயமுத்தூர்- 641043, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Revival of Congress Thinkers

**A. Lakshmi** [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: lakshmipoomesh@gmail.com

Received: 11-08-2022
Revised: 13-10-2022
Accepted: 07-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The early twentieth century saw many changes in Indian society. If we examine what was the background of these developments, we can mention the literature, movements, parties etc. that arose during that time. Magazines played an important role in the literature of the period. Many thinkers instilled national liberation thought and emotion to those who were trapped as slaves to the British who were free and taking them. Through it they also restored their culture. How the Congress took shape and grew from 1900 to 1925. Although the Congress party originated in the late nineteenth century, it can be said that it developed in the early twentieth century. Its development is the cultural elements of Tamils. Culture has its own country, language and race. After the arrival of other nationalities all these changed or changed. During the British rule they imposed their culture on us. Unable to accept this, the Tamil thinkers started a protest. Some of them struggled with thoughts. That is, they believed that the exchange of ideas would go into the brain of every man and build him. Congress thinkers took hold of that cultural structure. They made them fight for their way of thinking without giving up their patriotism and language. For that they rejected foreign goods. They also established trade unions to implement it. They used magazines and many pamphlets as the main source for this. Their aim was to bring the language of the Tamil to Tamil. The Congress thinkers fought for the liberation of the nation by knocking down the oppression of the British one by one and saving the rights of their country. Many thinkers worked together for this. E.V.Rramasamy, G.Subramaniaiyar, V.U.Chitambaranar, Bharatiyar, and C.Vijayaraghavachariar etc. raised the Congress. This will discuss how these Tamil thinkers stimulated the thoughts of the masses for the development of Congress.

**Keywords:** Reject, Nation, Comrade, School, State

## முன்னுரை

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வியாபாரம் செய்வதற்காக வந்தனர். இந்திய மக்களின் சாதி, மத வேறுபாட்டைக் கண்டனர். சொந்த நாட்டில் ஒருவருக்கொருவர் பேதத்தால் பிரிந்து இருந்ததைக் கண்டு தங்கள் மதிநுட்பத்தால் இந்தியாவை அடிமைத் தேசமாக மாற்றினர். ஆங்கிலேயரின் நோக்கம் உலக வல்லரசு நாடாக விளங்க வேண்டும் என்பதேயாகும். அதனால் இந்திய நாட்டு மக்களை அடிமைப்படுத்தினர். இந்தியாவையும் கைப்பற்றினர். அதன் மூலம் நாட்டின் வளர்ச்சிநிலைகளைத்

தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டனர். வீரத்தில் சிறந்தவர்களான இந்திய நாட்டு மக்களை அடிமைகள் என்ற பெயருடன் வாழச் செய்தனர். நாட்டின் மூலதனத்தைத் தங்கள் நாட்டிற்கு எந்தத் தடையுமின்றி எடுத்துச்சென்றனர். அதன் விளைவால் நாட்டுமக்கள் ஏழ்மைநிலையை அடைந்தனர். செல்வந்தர்களாய்ப் பரம்பரையாய் வாழ்ந்து வந்த மன்னர்களை வரி கட்டச் செய்தனர். அப்படிச் செய்யாதவர்களைத் தேசத் துரோகிகள் என்று கூறித் தண்டித்தனர். இம்முறையில் ஆங்கிலேயர்கள் இந்திய நிர்வாகத்தைத் தன்னகத்தே கைப்பற்றினர்.

அடிமைப்பட்டிருந்த இந்தியர்களுக்குச் சுதந்திரதாகம் எடுத்தது. அதன் விளைவாக விடுதலைச் சிந்தனைகள் தோன்றியன. நாட்டின் பல பகுதிகளில் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிராக இயக்கங்கள் தோன்றின. அப்போது 'இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை' ஏ.ஒ.ஹியூம் என்பவரால் 1885 - ஆம் ஆண்டு டிசம்பர் 28-ஆம் நாள் தொடங்கப்பட்டது. காங்கிரஸ் இயக்கம் தேசியம் வளர வழி வகுத்தது. இங்கு தேசியம் என்பது அவர்களின் பண்பாடேயாகும். 'பண்பாடு' என்பது வழிவழியாக மக்கள் கடைப்பிடித்து வரும் மூலத்தனமாகும். இவர்களின் அடக்கு முறையால் முதலில் சிதைக்கப்பட்டது பண்பாடு என்ற மூலத்தனம். இவை எவ்விதம் சிதைவு பெற்றது என்பதைக் கண்டறியலாம்.

## காங்கிரஸின் வரலாறு

1885-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் பம்பாயில் 'இந்தியன் நேஷனல் காங்கிரஸ்' என்னும் 'இந்திய தேசிய காங்கிரஸ்' தோன்றியது. 72 பட்டதாரிகளைக் கொண்டு 'ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம்' என்னும் ஆங்கிலேயரின் (1829-1912) முயற்சியால் தொடங்கப் பெற்றதுதான் காங்கிரஸ். 1885 முதல் 1905 வரை காங்கிரஸ் 'மிதவாதிகள்' செல்வாக்கில் இருந்தது.

இந்திய தேசிய காங்கிரஸ் இந்தியாவின் விடுதலை இயக்கத்தையே சமுதாயச் சீர்திருத்த இயக்கமாக மாற்றி மக்களுக்கு விடுதலை உணர்வையும் பண்பாட்டு சீர்திருத்தக் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டு பரப்பியது.

## தேசிய காங்கிரஸின் பண்பாட்டு சிந்தனைகள்

### இதழ்

'காங்கிரஸ்சபையின் நோக்கங்கள் பெரும்பாலும் தமிழிலேயும் தீர்மானங்கள் தேசஒழுக்கத்தில் காரியப்படும்படியும் உள்ளது. சாதி வேறுபாடு அரசியல் மாநாடுகளில் ஒழிந்தது' என்று பாரதியார் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் எழுதியுள்ளார்.

பாரதியார் இவ்வாறு கூறிய செய்திகளில் இருந்து ஆங்கிலேயர்களின் அடக்குமுறை எல்லா இடங்களிலும் பரவியது என்பது புலப்படுகிறது தீர்மானங்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்ற செய்தியிலிருந்து ஆங்கிலேயர்களின் அடக்குமுறை தமிழனின் பண்பாட்டு அடையாளமான தமிழ் மொழியை ஒழிக்கப் பாடுபட்டது. அதுமட்டுமல்லாமல் ஆங்கில மொழியை வளர்த்து அதன் மூலம் தங்களின் பண்பாட்டை நிலைநாட்டுவதே தங்களின் நோக்கமாக வைத்திருந்தனர். அதை முறியடிக்க காங்கிரஸ் தன்னளவில் போராடியது.

1908-இல் அரசாங்கக்குற்றக் கூட்டங்கள் சட்டமும், பத்திரிகைகள் சட்டமும், இரண்டுகுற்றவிதி திருத்தச் சட்டமும் பொதுமக்கள் எதிர்ப்புக்கு மாறாக நிறைவேற்றப்பட்டன. இதனால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். அரசாங்கத்தைப் பற்றிய செய்திகளைக் கொண்டு வெளிவரும் பத்திரிகைகள் முடக்கப்பட்டன. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்தனர். அவ்வாறு வெளியிடுபவர்களைக் குற்றவிதிச் சட்டத்தின் மூலம் கைது செய்து அவர்களை நாடு கடத்தியும் சிறைக்கு அனுப்பியும் தண்டித்தனர். இவற்றைப் போன்று பல தேச விடுதலைச் சிந்தனைகளை மக்களுக்குப் பரப்பிய வண்ணம் தன்னளவில் காங்கிரஸ் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

தேசிய காங்கிரஸின் கொள்கை தீண்டாமையை ஒழிப்பது, ஆலய நுழைவு, கல்விபெறல், பொது இடங்களைப் பயன்படுத்தல், கலப்புமணம் போன்றவற்றிற்காகப் போராடியது. காங்கிரஸின் நிர்மாணத்

திட்டம் மதுவிலக்கு பொருளாதாரச் சீர்கேட்டைத் தவிர்ப்பதாகயிருந்தது. ஆதி மனிதன் எவ்வித பேதமுமின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்தான். அதுபோல் இம்மக்களும் வாழ காங்கிரஸ் பாடுபட்டது.

## இளைஞர்கள்

1922-இல் கயா காங்கிரஸ் மாநாட்டில் சிங்காரவேலர் 'காம்ரேட்' என்று இளைஞர்களை அழைத்தார். 1923-இல் காங்கிரஸ் கொடியுடன் கம்யூனிஸ்ட் கொடியான கதிர் அரிவாள் சின்னம் இணைந்தது. இம்முயற்சிக்கு வித்திட்டவர் சிங்காரவேலர். இளைஞர்களே நாட்டின் ஊன்றுகோலாய் இருப்பவர்கள். அவர்களின் சிந்தனையில் பண்பாட்டின் அடையாளங்களைப் பதியச்செய்தனர். இளைஞர்களையும் நாட்டின் சமுதாயத்திற்காகப் பாடுபட வைத்தனர் (Selvaraj, 2004).

நமது பாடசாலைகளில் பாடப்புத்தகத்தில் மன்னர்களைப் பற்றியும், வீரர்களைப் பற்றியும் சரியானமுறையில் பாடம் கற்பிக்கப்படவில்லை. பாடப்புத்தகத்தில் அவர்களைப் பற்றிய செய்திகள் அதிகம்இடம்பெற்றால்தான் இன்றைய தலைமுறைகளும் அவ்வீரச் செயல்களை நினைவில் கொண்டு தாங்களும் வீரத்தோடு இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.பழைய கல்வி முறை கிடையாது. ஆயுதப்பயிற்சி கிடையாது. அதனால் பிற நாட்டினர் எளிதில் வந்து நம்மை அடிமைப்படுத்தி விடுகின்றனர். பிறநாட்டவர்களால் நம் நாடு கொள்ளையிடப்படுவதை அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சுதேச பக்தி இருப்பவர்கள் இந்நிலை மாற நேர்வழியில் போராட வேண்டும்.

## தொழிற்சங்கம்

1905-இல் வங்காளப் பிரிவினைச் சட்டம் போடப்பட்டது. அப்பிரிவினையை வங்காளத்தின் பிரச்சனையாகப் பார்க்காமல் இந்திய தேசத்தின் பிரிவினையாகப் பார்த்தனர். இந்தப் பார்வையை மாற்றியவர்கள் தேசத்தலைவர்களாவர். இதே ஆண்டு அந்நியநாட்டுப் பொருட்களை நிராகரித்தல் என்ற கொள்கையும் (அந்நியப் பொருட்கள் பகிஷ்காரம்) ஆரம்பிக்கப்பட்டது.

இதற்காக தொழிற்சங்கத்தைத் திரு.வி.க தொடங்கினார். மேலைநாட்டு நூல்களைப் படித்ததால் அவர் நாட்டின் முன்னேற்றத்திற்கு எவை முக்கியக் காரணங்களாக இருக்கிறது என்று ஆராய்ந்து தெரிந்துகொண்டார். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் முக்கிய முதல்படி வியாபாரம் அந்தவியாபாரத்தை விருத்தி செய்ய தொழிற்சங்கங்களை நிறுவினார். அதன் மூலம் நாட்டு மக்களின் வறுமையைத் தீர்த்து நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாதை வகுத்தார். இதன் மூலம் அந்நிய துணிகளை நிராகரித்து நம் பண்பாட்டின் அடையாளமான கதர் ஆடையை அணிய வழி செய்தனர்.

“தமிழ்நாடு காங்கிரஸ் நீதிக்கட்சிக்குப் போட்டியாக 1917-ஆம் ஆண்டு காங்கிரசில் இருந்த பார்ப்பனர் அல்லாத தலைவர்களைக் கொண்டு 'சென்னை மாகாணச் சங்கம்' என்கிற அமைப்பினைத் தோற்றுவித்தது.” கீழோர், மேலோர், முதலாளி, தொழிலாளி, ஆண், பெண் என்ற வேறுபாடுகளில்லாமல் நாட்டு மக்கள் எல்லோரையும் தன் பராமரிப்புக்குள் கொண்டது காங்கிரஸ் மகாசபை. எந்த வர்க்கபேதமுமின்றி மக்கள் அனைவரும் ஒரே இனம் என்று அடையாளம் காட்டியது. எந்த பேதத்தைக் கண்டு ஆங்கிலேயன் மக்களை அடிமைப்படுத்தினானோ அதை முறியடிக்க முயற்சித்தனர்.

## காங்கிரஸ் கூட்ட நோக்கங்கள்

ஒருவர் மட்டும் அரசாங்க நிருவாக அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். இப்படி கூறியதற்குக் காரணம் ஆங்கிலேயர் ஆட்சியின் போது தங்கள் சொந்த நாட்டிலிருந்து வரும் ஆங்கிலத் தலைவர்கள் ஒவ்வொரு முறையும் மேலிடத்தின் உத்தரவால் மாறினர். இதனால் விதிகளையும் சட்டத்தையும் மாற்றி அமைத்துக்கொண்டேயிருந்தனர். இந்நிலை மாற ஒரே அரசாங்க நிருவாகம் இருக்க வேண்டும் என்று வாதிட்டனர். மக்களே மக்களை ஆள வழி வகையை அமைத்தனர்.

அதுமட்டுமல்லாமல் நிருவாக அதிகாரமும் நீதி விசாரணை அதிகாரமும் ஒருவரிடமேயிருப்பதைத் தவிர்த்துவிட்டுத் தனித்தனி நபரிடம் இருக்க வேண்டும் என்றனர்.

வரித்திட்டத்தை மாற்றிக்கொண்டே இருக்காமல் ஒரே நிலையான திட்டமாக மாற்றிவிட வேண்டும். இவ்வரி அடிக்கடி மாறுவதால் நாட்டில் வாழும் ஏழைமக்கள் கடும் அவதிக்கு உள்ளாகின்றனர். சோற்றுக்கே வழியில்லாத ஒருவன் வரி எவ்வாறு கட்டுவான். எனக்கூட்டத்தின் நோக்கங்களாய் தமிழ்ச்சிந்தனையாளரான பெரியார் கூறினார் (Iraiyan, 2005). சொந்த நாட்டில் வரி செலுத்துவதைப் பற்றி விமர்சித்தனர். அதற்கு ஒரு தீர்வு ஏற்பட கட்சியின் மூலம் வழி செய்தனர்.

"இந்தியர்கள் முழு சுதந்திரமும் பெற வேண்டுமென்பதுதான் காங்கிரஸின் நோக்கம். தேச விடுதலையே காங்கிரசின் வெற்றி என்றது." தேச விடுதலையின் மூலம் அவர்களின் பாரம்பரியமான பண்பாட்டை திரும்ப பெற முயற்சித்தது.

'உயர்ந்தோர், தாழ்ந்தோர், முதலாளி, தொழிலாளி, ஆண், பெண் என்ற ஏற்றத்தாழ்வில்லாமல் அனைவரும் இந்நாட்டு மக்கள் என்ற பார்வையில் பார்ப்பதே காங்கிரஸ் மகாசபையின் நோக்கம். காங்கிரஸ் 'தேச விடுதலை இயக்கம்' என்ற பிரம்பைக் கையில் எடுத்துக்கொண்டு மூடநம்பிக்கைக்கு முதல் அடி கொடுத்தது. காங்கிரஸ் மகாசபை ஆரம்பகாலம் முதலிலிருந்தே தீண்டாதாரின் துயர்களை அறிந்து அவற்றைக் களைய முற்பட்டு வந்தது.

## காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள்

ஒரு கட்சிக்கும் மற்றொரு கட்சிக்குமிடையே கருத்து மோதல்கள் ஏற்பட்டகாலம் என்று கூறலாம். காங்கிரஸ்காரர்கள் பொதுக்கூட்டங்கள், பத்திரிகைகள் மூலம் தேசத்தின் விடுதலையைப் பற்றியும் ஆங்கிலேயர் வகுத்திருக்கும் அரசியல் சாசன சீர்திருத்தங்களைப் பற்றியும் பேசிக்கொண்டேதான் இருந்தனர். அதனால் எந்த ஒரு பலனும் கிடைக்கவில்லை. ஆனால் அச்சீர்திருத்தக் கூட்டத்தாரின் முயற்சிகள் அனைத்தும் நிறைவேறும் என்று ஒருவருக்கொருவர் தங்களுக்குள்ளே பெரிய அமைப்பாளன், கருத்தாளன், சிந்தனையாளன் என்று மோதிக் கொண்டனர்.

சுதந்திரம் கிடைப்பதற்காக அனைவரும் ஒரேகருத்தை முன்வைத்தனர். அவரவர் வழியில் கூறும் சிந்தனையின் தோற்றுவாய் வேறாக இருந்தது. முடிவு அனைவருக்கும் 'சுதந்திரம்' வேண்டும் என்பதே ஆகும். அதன் வழி பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்ய முற்பட்டனர்.

1900-லிருந்து 1906 வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலம் இந்தியச் சரித்திரத்திலேயே மிகவும் நெருக்கடியான காலம் எனலாம். மக்களின் சுயமதிப்பு வளர வளர அரசாங்கத்தின் பிற்போக்குக் கொள்கைகள் எளிதில் புரியும்படிச் சிந்தனைகள் தூண்டி விடப்பட்ட காலமாகும். 'கீழே அடிக்கப்பட்ட பந்து எப்படி அதே விசையுடன் மேலே வருகிறதோ' அதுபோல மக்களும் தங்கள் அறியாமையிலிருந்து வெளியே வர ஆரம்பித்தனர். இதற்குத் தேசிய உணர்ச்சி என்ற பாலம் மக்களை ஒன்றாக இணைத்தது.

## காங்கிரஸும் கல்வியும்

இந்தியாவில் ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக்கல்வி அளிக்க வேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரசின்3-வது வருடாந்திர மகாசபையில் கூறப்பட்டது. அக்கல்வியைத் தாய்மொழியிலேயே படிக்கவும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தாய்மொழியான தமிழ்மொழியின் வழி மக்களின் உரிமைகளை திரும்ப பெற பாடுபட்டனர்.

தாய்மொழிவழிக்கல்வியைப் பற்றித் தீர்மானத்தில் கூறுவதற்கான காரணம் ஆங்கிலேயரின் ஆட்சி நடைபெற்ற காலகட்டத்தில் ஆங்கிலப் பாடசாலைகளே அதிகமிருந்தது. அப்படி ஒரு சில பாடசாலைகளிருந்தாலும், அங்கு உயர்ந்த குலத்தோர் தாழ்ந்தகுலத்தோர் என்ற பாகுபாட்டால் கல்வி அனைவருக்கும் அளிக்கப்படாமலிருந்தது. இந்நிலை மாறத் தேசத்தலைவர்கள் அரும்பாடுபட்டனர்.

1923-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்லிடைக்குறிச்சியில் 'தமிழ் குருகுல வித்யாலயா' தொடங்கப்பட்டது. இது ஓராண்டிற்குப் பிறகு சேரமாதேவிக்கு மாற்றப்பட்டுவிட்டது. இதைப் பற்றி, திரு.வி.க 26.09.1924-ஆம் ஆண்டு நவசக்தியில் குறிப்பிட்டுள்ளார். சுத்தானந்த பாரதியாரும் இதைப் பற்றி

எழுதியுள்ளார். இந்தக் குருகுலத்தின் மாதவெளியீடு 'பாலபாரதி' இதழாகும். இவ்விதம் 1924-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பாலபாரதியில் வெளிவந்தது.

"பிற நாட்டவர்கள் நாளுக்கு நாள் செல்வமிகுதியாகின்றனர். நம் நாட்டவர்கள் கஞ்சிக்கே தாளம் போடுகின்றனர். இந்நிலையை மாற்ற அனைவரும் ஒன்றுகூடி விடுதலைக்காகப் போராட வேண்டும்." என்றனர் (Bharathiyar & Venkatachalapathy, 2015).

கல்விமுறையின் அமைப்புகளை மாற்ற காங்கிரஸ் இயக்கத்தில் பல வழிகளில் பாடுபட்டனர். கல்விக்காக நிதிகளை ஒதுக்கினர். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பேதமின்றி மாணவர்கள் ஒன்றாய்ப் படிக்க சேரமாதேவி பாடசாலைகளின் விதிகளை மாற்றினர். பாடப்புத்தகத்தின் வழிமுறையையும் மாற்ற கோரிக்கை விடுத்தனர். சேர, சோழ, பாண்டியர்களோடு வீரமும் போனது. அந்நியர்கள் இந்தியநாட்டை கூறுபோடுவதைக் கண்டும் காணாமல் மக்கள் செல்கின்றனர். இந்நிலைமைக்குக் காரணம் கல்விதான். அடித்தளம் உறுதியாய் இருந்தால் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அதனால், முற்கால மன்னர்களைப் பற்றியும் வீரத்தைப் பற்றியும் மாணவர்களுக்குப் பாடப்புத்தகத்தில் இருந்தால் அவர்களின் சிந்தனைப்போக்கு மாறும். இது என் நாடு, இவர்கள் எம்மக்கள் என்ற தேசிய உணர்வு அடித்தளத்திலிருந்தே தோன்றும் என்பதை காங்கிரஸ் இயக்கத்தினர் வலியுறுத்தினர். சிலகோயில்களின் வரும்படியைத் தேவாரபாட சாலைகளுக்கும், தனித் தமிழ்ப் பாடசாலைகளுக்கும், சைவ சித்தாந்தசபைகட்கும், தமிழ் சைவ சித்தாந்த முணர்ந்த ஆசிரியர்க்கும், தமிழ்நூல் எழுதுவோர்க்கும், சைவசித்தாந்த விரிவுரையாளர்களுக்கும், கோயிலைச் சார்ந்த சத்திரம் சாவடிகட்கும் பயன்படுத்தல் வேண்டும். எனக் கூறினர்.

'பாலபாரதி' என்ற மாத இதழில் பாரதியார் கோயில் நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடினின்றி ஒற்றுமையாகச் செல்லும் ஒரே இடமான கோயில் நிதியை தமிழுக்காவும், இல்லாத ஏழை எளிய மக்களுக்காகவும் பயன்படுத்த வேண்டும் என்றார். தமிழ் வளர்ந்தால்தான் தேசம் முன்னேற்றமடையும் என்ற வகையில் நிதியைப் பாடசாலைகளுக்கும் செலவிட வேண்டும் என்று கூறியது அவருடைய தேசச் சிந்தனையைக் காட்டுகிறது. தேச சிந்தனை என்ற உணர்வின் வெளிப்பாடே பண்பாட்டு மீட்டுருவாக்கத்தின் பதிவுகளாக பதியப்பட்டுள்ளது.

## முடிவுரை

காங்கிரஸ் சிந்தனையாளர்கள் தேசத்தை மீட்கும் வழியில் அவர்களின் பண்பாட்டையும் மீட்டனர் என்று கூறலாம். அவர்கள் கூறும் ஒவ்வொரு நோக்கத்திலும் மக்களின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதாகவே அமைந்தது. சீர்திருத்த கருத்துக்கள் சிந்தனைகள் என்ற பெயரில் மக்கள் இழந்ததை மீண்டும் அவர்களுக்கே கிடைக்க பாடுபட்டனர் கல்வியின் வழியில் தாய்மொழியை நிலைநாட்ட விரும்பினர். தொழிற்சங்கத்தின் மூலம் கதர் ஆடையை அணிய வைத்தனர். இதழ்களின் வழி தமிழ் சுவையை ஊட்டினர். சுயாட்சி வேண்டும் என்ற கருத்துக்களின் வழி வரி திட்டத்தை மாற்றி அமைக்க பாடுபட்டனர். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இன்றி மக்களை ஒன்றாக்கினர். காங்கிரஸ் சிந்தனையாளர்களின் நோக்கங்களைப் பார்த்தோமானால் மக்கள் தங்களின் பண்பாட்டை இழக்காமல் மீண்டும் பெறுவதற்குச் சுதந்திரம் என்ற வழியில் மீட்டுருவாக்கம் செய்ய பாடுபட்டனர். சமுதாயச் சீர்திருத்தத்தையும் தேச விடுதலையையும் தன் நோக்கமாகக் கொண்டு இயங்கிய இயக்கமாகக் காங்கிரஸ் இயக்கம் தோற்றம் பெற்று வளர்ந்துள்ளது. தீண்டப்படாதவர்களுக்காவும் காங்கிரஸ் இயக்கம் பாடுபட்டுள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக ஒரு வார்த்தை பேசினாலும் அரசாங்கக் குற்றக் கூட்ட சட்டத்தின் மூலம் கைது செய்யும் காலத்திலும் எதற்கும் அஞ்சாமல் தன் கடமையிலிருந்து தவறாமல் காங்கிரஸ் கட்சி மக்களுக்கு விழிப்புணர்வை ஒவ்வொரு மாநாட்டிலும் கொடுத்துக் கொண்டேயிருந்தது. காங்கிரஸ் ஒவ்வொரு மாநாட்டிலும் தேசப் பிரச்சினையையும், மக்களின் பிரச்சினையையும் பற்றிப் பேசி அதைப் பாராளுமன்றம்வரை கொண்டு சென்று அதற்குத் தீர்வு காண வழிசெய்தது. சுயஆட்சி, அந்நியப்பொருட்களை நிராகரித்தல், முழு சுதந்திரம் போன்றவற்றை எவ்வாறு மக்கள் பெற முடியும் என்பதைப் பற்றியும் அவற்றைப் பெற என்ன

வழிவகைகள் என்பதைப் பற்றியும் மாநாட்டில் பேசி மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டினர். காங்கிரஸ் இயக்கத்தின் நோக்கத்தைப் பரப்பப் பல பத்திரிகைகளும் வழிவகுத்தன. உதாரணமாக பாராதியார் 'சுதேசமித்திரனில்' காங்கிரஸ் கட்சியினர் நோக்கத்தைப் பற்றிப் பாராட்டி எழுதியுள்ளார். இக்கட்சிக்கு இவ்வாறு பிற இதழ்களும் ஆதரவளித்தன. பாரதியார் காங்கிரஸில் தீவிரவாத இயக்கத்தில் இருந்தார். மக்களின் வாழ்க்கைத்தரம் உயர அரசாங்கப் பரீட்சைகள், சட்டசபை பிரதிநிதிக்கான வாய்ப்பு போன்றவற்றைப் பற்றி மாநாட்டில் பேசி அவ்வாய்ப்புகள் மக்களுக்குக் கிடைக்க எவ்வாறு பாடுபட வேண்டும் என்று கற்றுத்தந்தது. இக்கட்சியின் மூலம் சமுதாயத்தில் பல தலைவர்களும், சிந்தனைகளும் தோன்றின. ஓர் இயக்கம் கட்சியாக மாறும் போது சில கட்சிப் பூசல்கள் உண்டாகும். அதுபோல் கட்சிப்பூசல்கள் இருந்தாலும் காங்கிரஸ் தன் தனித்தன்மையை விட்டுக்கொடுக்காமல் தேசத்திற்காகப் பாடுபட்டது. பல இயக்கங்களும், சிந்தனையாளர்களும் சமுதாய சீர்திருத்தத்தையும், தேசவிடுதலையையும் தனது நோக்கமாகக் கொண்டு செயல்பட்டதைப் போலவே காங்கிரஸ் இயக்கமும் தனக்கென ஒரு பாதையை வகுத்துக் கொண்டு தேசத்திற்காகப் பாடுபட்டது என்பதை அறியலாம். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் வளர்ச்சிப் பெற்ற காங்கிரஸ் எண்ணற்ற சாதனைகளையும், சோதனைகளையும் தாண்டி பண்பாட்டை வளர்த்தது என்பதைத் தமிழ்அறிஞர்களின் சமூக சீர்திருத்தச் சிந்தனைகளின்வழி அறிய முடிகிறது.

## References

Bharathiyar, S., Venkatachalapathy, A.R. (2015) Parathi vijaya katturaikal, Kalachuvadu Publications, Nagarkovil, India

Iraiyan, A. (2005) Ithalalar Periyar International Tamil Research Institute, Chennai, India

Selvaraj, T. (2004) Singaravelar Katturaikal, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License